17.09.2025

OS No: 68/2013

வா.சா. 1 திரு. காசி த/பெ ராமையா

**<u>D1 to D5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சாம்பவிகா கல்வி அறக்கட்டளையானது 6 நபர்கள் பணம் கொடுத்து முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் நோக்கமானது சிவகங்கை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு நல்ல கல்வியை கொடுக்க வேண்டும் என்பதாகும் என்றால் சரிதான். மேற்படி பணம் கொடுத்த 6 நபர்களில் 3 நபர்கள் அறக்கட்டளையை விட்டு 31.05.2006ல் வெளியேறிவிட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு வெளியேறிய நபர்கள் யார் என்றால் முத்துகண்ணன், சரவணன், கணேசன். அவ்வாறு மேற்படி நபர்கள் வெளியேறிய பிறகு புதிய நபர்கள் யார் யார் டிரஸ்டியாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் 12.06.2006 ம் தேதியன்று சேகர், ராணி, பாரதிதாசன் புதிய டிரஸ்டியாக சேர்ந்தார்கள். சேகர் என்னுடைய மருமகன், ராணி எனது மகள், பாரதிதாசன் மற்றொரு மகன் என்றால் சரிதான். நான் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை செயலாளராக பணி புரிந்து வருகிறேன் என்றால் 2000 வருடத்தில் இருந்து 22.08.2012 ம் தேதி வரை செயலாளராக பணி புரிந்தேன். மேற்சொன்ன வருடங்களில் தொடர்ச்சியாக நான் ஒருவர் மட்டுமே செயலாளராக இருந்து வந்தேன் என்றால் சரிதான். 22.08.2012 ம் தேதி நான் செயலாளர் பதவியை ராஜினாமா செய்த போது மேற்படி அறக்கட்டளைக்கு யார் செயலாளராக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சேகர் என்பவர் சேர்க்கப்பட்டார். ( சாட்சி தற்போது பள்ளியின் செயலாளர் பதவில் இருந்து தான் ராஜினாமா செய்ததாகவும், அப்பதவியில் தான் சேகர் நியமிக்கப்பட்டதாகவும் சொல்கிறார்.) 2000 வருடத்தில் இருந்து 22.08.2012 ம் தேதிவரையிலான காலகட்டத்தில் சாம்பவிகா கல்வி அறக்கட்டளைக்கு யார் தலைவராக இருந்தார் என்றால் அறக்கட்டளையின் தலைவர் பதவியானது வருடத்திற்கு ஒரு முறை நியமிக்கப்பட கூடியதாகும். முத்துக்கண்ணன், பாலமுருகன், சரவணன், கணேசன் மற்றும் நான்

தலைவராக மாறி மாறி இருந்தோம். 2000ம் வருடத்தில் இருந்து 2012 ம் வருடம் வரை சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் தலைவராக நான் எத்தனை முறை இருந்துள்ளேன் என்றால் 4 முறை இருந்துள்ளேன். அறக்கட்டளையில் இருந்து 3 நபர்கள் வெளியேறியதாக நான் சொல்வதில் என்ன காரணத்திற்காக அவர்கள் வெளியேறினார்கள் என்றால் முத்துகண்ணன் என்பவர் ஸ்கூல் ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக வெளியே சென்றார். சரவணன் என்பவர் தனக்கு சீனியாரிட்டி அடிப்படையில் அரசு ஆசிரியராக வேலைக்கு சென்றதால் வெளியேறினார். கணேசன் என்பவர் அவரது மனைவியும், மகனும் விபத்தில் இறந்த காரணத்தால் துக்கம் தாங்காமல் வெளியேறிவிட்டார். மேற்படி சேகர், ராணி, பாரதிதாசன் ஆகியோர் நான் கேட்டுக்கொண்டதற்காக அறக்கட்டளையில் சேர்ந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 3 பேரும் அறக்கட்டளையில் சேர்வதற்குரிய பங்கு தொகையை சேகர் கொடுத்து மூவரும் சேர்ந்தார்கள் என்றால் சரிதான். பாரதிதாசன் வெளிநாடு சென்ற காரணத்தால் சேகர், ராணியின் மகன்களான கார்த்திகேயன், பார்த்திபன் ஆகியோரில் யாரேனும் ஒருவரை அறக்கட்டளை உறுப்பினராக சேர்த்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி அறக்கட்டளைக்கான சாம்பவிகா மேல்நிலை பள்ளியின் தலைமை ஆசிரியராக எனது மகன் மாறன் எந்த வருடத்தில் இருந்தார் என்றால் 2007 முதல் 2012 வருடம் அவர் இறக்கும் வரை இருந்தார். எனது மகன் மாறன் புற்று நோயால் பாதிக்கப்பட்டு இறந்தார் என்றால் சரிதான். 2000 முதல் 2012 வரை சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் கூட்டமானது 2 மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட்டதா என்றால் கூட்டப்பட்டது. மேற்படி 2 மாதத்திற்கு ஒரு முறை கூடும் கூட்டத்தில் அப்போது இருந்த சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் 6 உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டார்களா என்றால் கலந்து கொண்டார்கள். மேற்படி கூட்டம் கூட்டப்படுவது குறித்து வாய் மொழியாக சொல்லப்படும் என்றால் சரிதான். நோட்டில் எழுதி தெரிவிக்கப்படும். மேற்படி 2000 முதல் 2012 வரையிலான கூட்டம் கூட்டியதற்கான நோட்டு ஒன்று அறக்கட்டளையில் பராமரிக்கப்பட்டது என்றால்

சரிதான். நான் செயலாளர் பதவியை எதற்காக ராஜினாமா செய்தேன் என்றால் எனது மகன் மாறனை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும் என்பதற்காகவும், பள்ளிக்கூடத்தை(School) சேகர் தரப்பினார் குழப்பம் செய்து வந்ததாலும் நான் ராஜினாமா செய்தேன். செயலாளர் பதவியை ராஜினாமா செய்த பிறகு மேற்படி செயலாளர் பதவிக்கு இன்றைய தேதி வரை சேர்ந்திட நான் முயற்ச்சிக்கவில்லை என்றால் சரிதான். 2012 ல் இருந்து இன்றைய தேதி வரை சாம்பவிகா கல்வி அறக்கட்டளை மற்றும் மேல்நிலை பள்ளியை சேகரும், ராணியும் தான் பராமரித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2012 க்கு பிறகு தற்போது வரை சேகர் மீதும், ராணி மீதும் காவல் நிலையத்தில் எத்தனை புகார்கள் கொடுத்திருப்பேன் என்றால் ராணி மீது கொடுக்கவில்லை சேகர் மீது சுமாராக 10 க்கு மேற்பட்ட புகார்களை கொடுத்திருப்பேன். மேற்படி புகார்களின் நகல்களை கல்வித்துறை அலுவலக அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளேன். மேற்படி புகார்கள் மீது காவல் துறையிலோ, கல்வி துறையிலோ நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனக்கும் மேற்படி எனது மகளான ராணி, மருமகனான சேகர் ஆகியோர்களுக்கு இடையே சாம்பவிகா கல்வி அறக்கட்டளை சம்மந்தமாக எப்போது பிரச்சனை ஆரம்பித்தது என்றால் எனது மகன் மாறன் இறந்த பிறகு ஆரம்பித்தது. எதன் அடிப்படையில் பிரச்சனை ஆரம்பித்தது என்றால் ஏழை எளிய பிள்ளைகளுக்கு அரசு நிர்ணயித்த தொகையை விட கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்பட்டதால் பிரச்சனை ஆரம்பம் ஆனது. சாம்பவிகா கல்வி அறக்கட்டளை பள்ளிக்கு சேகர், ராணி மூலமாகவோ வேறு யாருமூலமாகவோ கூடுதலாக கல்வி கட்டணம் எதுவும் வசூலிக்கப்படவில்லை என்றால் தவறு.

(1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணைக்கு கால அவகாசம் கோரி வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.09.17 15:54:28 +0530